©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 94A] சென்னை, திங்கட்கிழமை, ஏப்ரல் 9, 2012
பங்குனி 27, திருவள்ளுவர் ஆண்டு - 2043

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2012–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2012.**

***1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2012–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974. **2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான), 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில், (1), (1-A), (1–B) ஆகிய கூறுகளுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- 2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(1) ‘‘கட்டுமானத் தளவாட ஊர்தி’’ என்றால் குழாய்ப்பட்டை (காற்றடைத்த குழாய்ப்பட்டை உள்ளடங்கலான), குழாய்ப்பட்டையில் அமைந்த காப்புறை அல்லது இரும்பாலான உருளை பொருத்தப்பட்ட அல்லது சக்கரம் பொருத்தப்பட்ட தானியங்கி இயந்திரம், நில அகழ்வு இயந்திரம், சுமையேற்றி, பின் அள்ளும் இயந்திரம், மண் இறுக்கும் உருளைகலான இயந்திரம், மண் குவிக்கும் இயந்திரம், சமதளபடுத்தும் இயந்திரம், நகரும்

பளு தூக்கி, மண் தள்ளும் இயந்திரம், சுமைகளை இடம் விட்டு இடம் நகர்த்தும் வாகனம், தானேற்றி காரை கலவை அல்லது அவற்றோடு இணைந்தவை எதுவும், நெடுஞ்சாலைகளில் நடைபெறும் சுரங்கவேலைப்பாடுகளில், தொழில் நிறுவனப் பணிகளில், நீர்பாசனப் பணிகளில் அல்லது நெடுஞ்சாலைகளில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு ‘‘இயங்கு நிலை அல்லது இயங்கா நிலை’’ அல்லது ‘‘இயங்கு மற்றும் இயங்கா நிலை’’ யில் செயல்படுவதற்கெனத் தயாரிக்கப்பட்ட, பொதுவான கட்டுமானம் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட கட்டுமானத் தளவாட ஊர்தி அல்லது அவை போன்ற பிற ஊர்தி எதுவும் எனப் பொருள்படும்.

**விளக்கம்.–**கட்டுமானத் தளவாட ஊர்தி என்பது, மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்திற்கு மேற்படாமல் குறைவானதொரு கால அளவிற்கு நெடுஞ்சாலையில் அல்லாத பிரதான பணிகளுக்கு இடைவிளைவாக சாலையில் ஓடக்கூடியதாகவும் ஆனால் சாலை இணைப்புப்பணி அல்லாத பிற சுற்றுச்சுவருடன் கூடிய இடங்கள், தொழிற்சாலை அல்லது சுரங்கம் எதனையும் சார்ந்த பயன்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட மற்றும் தகவமைவுபெற்ற, அவற்றின் இயக்க சக்தியில் பொதுச்சாலைகளில் பயணம் செய்வதற்கு ஏற்றதாக இல்லாத நெடுஞ்சாலையில் அல்லாத பணிக்கேயான கட்டுமான தளவாட ஊர்தி பிறவற்றை உள்ளடக்காத அத்தகைய போக்குவரத்து ஊர்தி அல்லாத ஊர்தி ஒன்றாக இருத்தல் வேண்டும்;

(1-A) ‘‘ஊர்தி தொகுப்பை இயக்குபவர்’’ என்றால்

(i) விரைவுச் சேவை; அல்லது

(ii) முழுவதும் சென்னைப் பெருநகர் பகுதிக்குள்ளான தனிப்பட்ட சேவை தவிர பிற சேவைகளைப் பொறுத்த அளவில், 1978–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளன்று அல்லது அதன் பின்னர் இருநூற்று ஐம்பது நிலை ஊர்தி அனுமதிகளுக்கு குறையாமல் பெற்றுள்ள இயக்குபவர் ஒருவர் எனப் பொருள்படும்.

(1-B) ‘‘தரைப்பரப்பு’’ என்றால் மொத்த தரைப்பரப்பில் நூற்றுக்கு பத்து விழுக்காடு என்பதான நிலையான அளவை கழித்த பின்னர் ஊர்தியின் (நீள அகலமாகக் கணக்கிடுகையில்) உள் அமைப்பிற்குள் அமைந்த மொத்த தரைப்பரப்பு எனப்பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், நிலையான கழிவைச் செய்த பின்னர் அடையப்பெறும் நிகர தரைப்பரப்பின் முதல் தசம புள்ளிக்கு அப்பால் வரும் சதுர மீட்டர் ஒன்றின் பின்னமானது, அதன் அடுத்த உயர்தசம புள்ளிக்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும்;

(1-C) ‘‘அரசு’’ என்றால் மாநில அரசைக் குறிக்கும்;’’.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின், 3–ஆம் பிரிவில்,–

(1). (1)–ஆம் உட்பிரிவில், ‘‘ஐந்தாம் இணைப்புப்பட்டியலில்’’ என்னும் சொற்றொடருக்குப்பின்பு, ‘‘அல்லது ஏழாம் இணைப்புப்பட்டியலில் அல்லது எட்டாம் இணைப்புப்பட்டியலில் அல்லது ஒன்பதாம் இணைப்புப்பட்டியலில்’’ எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

(2). (2)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரை, ‘‘ஐந்தாம் இணைப்புப்பட்டியலில்’’ என்னும் சொற்றொடருக்குப்பின்பு, ‘‘அல்லது ஏழாம் இணைப்புப்பட்டியலில் அல்லது எட்டாம் இணைப்புப்பட்டியலில் அல்லது ஒன்பதாம் இணைப்புப்பட்டியலில்’’ எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவில்,–

(1) (1-A) எனும் உட்பிரிவில், (a) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

‘‘(a) இரண்டாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I-இல், மூன்றாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I-இல், ஏழாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I–இல் மற்றும் எட்டாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I–இல் குறித்துரைக்கப்பட்ட இயக்கூர்திகளைப் பொறுத்தளவில், அவற்றைப் பதிவு செய்யும்போது, இரண்டாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I-இல் அல்லது மூன்றாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I-இல் அல்லது ஏழாம்

இணைப்புப் பட்டியலின் பகுதி–I–இல் அல்லது நேர்விற்கேற்ப எட்டாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I–இல் குறித்துரைக்கப்பட்டவாறான வீதங்களில் ஆயுட்கால வரி ஒன்று அத்தகைய இயக்கூர்திகளின் ஆயுட்கால அளவிற்கு எடுக்கப்படவேண்டிய உரிமம் ஒன்றின்பேரில் செலுத்தப்படுதல் வேண்டும்;

(aa) ஏழாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–II–இல் குறித்துரைக்கப்பட்ட இயக்கூர்திகளைப் பொறுத்த அளவில், அத்தகைய ஊர்திகளின் பதிவுச் செய்யப்பட்ட உரிமையாளர்கள், அனுமதியைப் புதுப்பிக்கும்போதோ அல்லது ஏற்கெனவே உள்ள அனுமதிச்சீட்டு நடப்பில் இருக்கும்போதோ அதில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களிலான ஆயுட்கால வரியைச் செலுத்துதல் வேண்டும். அனுமதியானது நடப்பில் இருக்கும்போது அந்த இயக்கூர்திகளின் பதிவுச் செய்யப்பட்ட உரிமையாளர்கள் ஆயுட்கால வரியைச் செலுத்த விழையும் நேர்வுகளில், அவர்கள் **2013–ஆம்** ஆண்டு மார்ச் திங்கள் **31–ஆம்** தேதிக்கு முன்னர் அவர்களது விருப்பத்தெரிவைச் செயல்படுத்துதல் வேண்டும் மற்றும் பின்வரும் ஏதேனுமொரு முறையில் வரியைச் செலுத்துதல் வேண்டும்:-

(i) உரிமத்தின் பயன்படுத்தப்படாத கால அளவைப் பொறுத்த அளவில் ஏற்கெனவே செலுத்தப்பட்ட வரியின் விகிதாச்சாரத் தொகையைக் கழித்த பின்னர் ஒட்டுமொத்தத்தொகை ஒன்றாக ; அல்லது

(ii) உரிமத்தின் பயன்படுத்தப்படாத கால அளவைப்பொறுத்த அளவில் ஏற்கெனவே செலுத்தப்பட்ட வரியின் விகிதாச்சாரத் தொகையில் அத்தகைய தவணை ஒவ்வொன்றிலும் நான்கில் ஒரு பங்கினைக் கழித்த பின்னர் நான்கு ஆண்டு சம தவணைகளாக;

(aaa) எட்டாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–II–இல் குறித்துரைக்கப்பட்ட இயக்கூர்திகளைப் பொறுத்த அளவில், வரியானது அதில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில், அத்தகைய இயக்கூர்திகளுக்கு எடுக்கப்படவேண்டிய உரிமம் ஒன்றின்பேரில் செலுத்தப்படுதல் வேண்டும்;'';

**(2) (4)–**ஆம் பிரிவில், ''ஐந்தாம் இணைப்புப் பட்டியல்'' என்னும் சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது ஏழாம் இணைப்புப் பட்டியலில் அல்லது எட்டாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–I–இல்'' எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

**5.** முதன்மைச் சட்டத்தின், **6–**ஆம் பிரிவிற்குப் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:- **6–**ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**''வரம்புரை:** ஆனால், ஒன்பதாம் இணைப்புப் பட்டியலின் குறித்துரைக்கப்பட்ட ஒப்பந்த ஊர்திகளைப் பொறுத்த அளவில், அத்தகைய தற்காலிக உரிமமானது ஒன்பதாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் வரி செலுத்தப்பட்டதன்பேரில் வழங்கப்படலாம்.''.

**6.** முதன்மைச் சட்டத்திற்கான முதலாம் இணைப்புப் பட்டியலில்,– முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**(1)** வகை **2–**இல்,–

(i) பத்தி **1–**இல், (d) எனும் இனமும் அதன் தொடர்பான பதிவுகளும் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ii) பத்தி **1–**க்குப் பின்பு, பின்வரும் பத்தியானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| ''I-A, ஓட்டுநர் உள்ளடங்கலாக ஏழு நபர்களுக்கு மேற்பட்டு, ஆனால் பதிமூன்று நபர்களுக்கு மேற்படாமல் சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட, **6** சதுர மீட்டருக்கு மேற்படாத தரைப்பரப்பினையுடைய, சுற்றுலா பெருமச் சீருந்து உரிமம் வழங்கப்பட்டுள்ள ஊர்திகளைப் பொறுத்த அளவில், ஓட்டுநர் நீங்கலான பிற நபர் ஒவ்வொருவருக்கும் | **275.00.**''; |

**(2)** வகை **5–**A இல், (b) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| "(b) ஓட்டுநர் உள்ளடங்கலாக நான்கு நபர்களுக்கு மேற்பட்டு ஆனால் ஆறு நபர்களுக்கு மேற்படாத (வழக்கமான சீருந்து–கட்டணமானி பொருத்தப்பட்ட வாடகைச் சீருந்து) | 800.00''; |
| (3) வகை 6–B-க்கு பின்பு பின்வரும் வகையானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— | |
| "6–C கட்டுமானத் தளவாட ஊர்தி | 10,000.00''; |
| (4) வகை 8–இல், (b) எனும் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறானது, அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- | |
| "(b) பிற நேர்வுகளில்–ஊர்தி சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட (ஓட்டுநர் நீங்கலாக பிற) ஒவ்வொரு நபருக்கும்,– | |
| (i) குளிர் சாதன வசதியுடன் | 600.00 |
| (ii) குளிர் சாதன வசதியின்றி | 500.00"; |
| (5) வகை 9–க்குப் பின்பு, பின்வரும் வகையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— | |
| "10. இருப்பு நிலை ஊர்தி அல்லது உபரிப் பேருந்து (ஓட்டுநர் மற்றும் நடத்துனர் நீங்கலாக ஆறு நபர்களுக்கு மேற்பட்டு சுமந்து செல்வதற்கான) சிறப்பு அனுமதிச் சீட்டின்கீழ் சிறப்பு நிகழ்வுகளின் பேரில் ஒப்பந்த ஊர்தியாக இயக்கப்படும் போது | *வரி* ரூபாய். 15.00 நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு''. |

புதிய இணைப்பு பட்டியல்கள் சேர்க்கப்படுதல்.

**7.** முதன்மைச் சட்டத்திற்கான ஆறாம் இணைப்பு பட்டியலுக்குப் பின்பு, பின்வரும் இணைப்பு பட்டியல்கள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**"ஏழாம் இணைப்பு பட்டியல்.**

[3,4 (1-A) (a) மற்றும் (aa) எனும் பிரிவைக் காண்க]

**பகுதி – I**

| | |
|---|---|
| ஓட்டுநர் உள்ளடங்கலாக நான்கு நபர்களுக்கு மேற்பட்டு ஆனால் ஏழு நபர்களுக்கு மேற்படாமல் சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட புதிய சுற்றுலாச் சீருந்து பதிவு செய்யும் போது | *வரிவீதம்* |
| (i) ஊர்தியின் மதிப்பு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாதிருப்பின் | ஊர்தியின் மதிப்பில் நூற்றுக்கு 10 விழுக்காடு. |
| (ii) ஊர்தியின் மதிப்பு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்டிருப்பின் | ஊர்தியின் மதிப்பில் நூற்றுக்கு 15 விழுக்காடு. |

**பகுதி–II**

| | |
|---|---|
| ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மற்றும் ஓட்டுநர் உள்ளடங்கலாக நான்கு நபர்களுக்கு மேற்பட்டு ஆனால் ஏழு நபர்களுக்கு மேற்படாமல் சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட பழைய சுற்றுலாச் சீருந்து | *வரிவீதம்* |
| (i) ஊர்தியின் மதிப்பு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாதிருப்பின் | ஊர்தியின் மதிப்பில் நூற்றுக்கு 8.5 விழுக்காடு. |
| (ii) ஊர்தியின் மதிப்பு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்டிருப்பின் | ஊர்தியின் மதிப்பில் நூற்றுக்கு 14.5 விழுக்காடு. |

**விளக்கம்.–** இந்த இணைப்புப் பட்டியலின் நோக்கத்திற்காக, ''ஊர்தியின் மதிப்பு'' என்றால் வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் ஊர்தியை வாங்கும்போது நிர்ணயிக்கப்பட்ட ஊர்தியின் மதிப்பு எனப்பொருள்படும்.

**எட்டாம் இணைப்புப் பட்டியல்.**

[3, 4 (1-A) (a) மற்றும் (aaa) எனும் பிரிவைக் காண்க]

**பகுதி–I**

ஓட்டுநர் உள்ளடங்கலாக ஏழு நபர்களுக்கு மேற்பட்டு ஆனால் பதிமூன்று நபர்களுக்கு மேற்படாமல் சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட, 6 சதுர மீட்டருக்கு மேற்பட்ட தரைப்பரப்பினையுடைய, புதிய சுற்றுலா பெருமச் சீருந்து.

| | |
|---|---|
| பதிவு செய்யும் போது | ***வரிவீதம்*** |
| (i) ஊர்தியின் மதிப்பு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாதிருப்பின் | ஊர்தியின் மதிப்பில் நூற்றுக்கு 10 விழுக்காடு. |
| (ii) ஊர்தியின் மதிப்பு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்டிருப்பின் | ஊர்தியின் மதிப்பில் நூற்றுக்கு 15 விழுக்காடு. |

**<u>விளக்கம்</u>**.–இந்த இணைப்புப் பட்டியலின் நோக்கத்திற்காக, ''ஊர்தியின் மதிப்பு'' என்றால் வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் ஊர்தியை வாங்கும்போது நிர்ணயிக்கப்பட்ட ஊர்தியின் மதிப்பு எனப்பொருள்படும்.

**பகுதி–II**

| | |
|---|---|
| ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மற்றும் ஓட்டுநர் உள்ளடங்கலாக ஏழு நபர்களுக்கு மேற்பட்டு ஆனால் பதிமூன்று நபர்களுக்கு மேற்படாமல் சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட பழைய சுற்றுலா பெருமச் சீருந்து | ***காலாண்டு வரி.*** ரூபாய். |
| (i) ஊர்தியின் தரைப்பரப்பானது.– 6 சதுர மீட்டருக்கு மேற்பட்டு ஆனால் 8 சதுர மீட்டருக்கு மேற்படாதிருப்பின். | சதுர மீட்டர் ஒன்றுக்கு 420.00 |
| (ii) ஊர்தியின் தரைப்பரப்பானது.– 8 சதுர மீட்டருக்கு மேற்பட்டிருப்பின். | சதுர மீட்டர் ஒன்றுக்கு 450.00 |

**ஒன்பதாம் இணைப்புப்பட்டியல்.**

[3–ஆம் மற்றும் 6–ஆம் பிரிவைக் காண்க.]

தற்காலிக உரிமம் வழங்கப்படுகின்ற ஒப்பந்த ஊர்திகளைப்பொறுத்த அளவில்–

| | |
|---|---|
| (a) சுற்றுலாச் சீருந்து– | ***வரி.*** ரூபாய். |
| (i) தற்காலிக உரிமமானது 7 நாள்களைக் கொண்டதொரு கால அளவுக்கு மேற்படாதிருப்பின் | நுழைவு ஒன்றுக்கு 60.00 |
| (ii) தற்காலிக உரிமமானது 7 நாள்களுக்கு மேற்பட்டு ஆனால் 30 நாள்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கானதாக இருப்பின் | நுழைவு ஒன்றுக்கு 180.00 |
| (iii) தற்காலிக உரிமமானது 30 நாள்களுக்கு மேற்பட்டு ஆனால் 90 நாள்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கானதாக இருப்பின் | நுழைவு ஒன்றுக்கு 450.00 |

| | |
|---|---|
| (b) சுற்றுலா பெருமச் சீருந்து— | |
| (i) தற்காலிக உரிமமானது 7 நாள்களைக் கொண்டதொரு கால அளவுக்கு மேற்படாதிருப்பின் | நுழைவு ஒன்றுக்கு இருக்கை ஒன்றுக்கு 75.00 |
| (ii) தற்காலிக உரிமமானது 7 நாள்களுக்கு மேற்பட்டு ஆனால் 30 நாள்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கானதாக இருப்பின் | நுழைவு ஒன்றுக்கு இருக்கை ஒன்றுக்கு 160.00 |
| (iii) தற்காலிக உரிமமானது 30 நாள்களுக்கு மேற்பட்டு ஆனால் 90 நாள்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கானதாக இருப்பின் | நுழைவு ஒன்றுக்கு இருக்கை ஒன்றுக்கு 450.00 |
| (c) 1988–ஆம் ஆண்டு இயக்கூர்தி சட்டத்தின் 88–ஆம் பிரிவின் (8)–ஆம் அல்லது (9)–ஆம் உட்பிரிவின்படி அனுமதி வழங்கப்பட்ட படுக்கை வசதி கொண்ட பேருந்து உள்ளடங்கலான ஆம்னி பேருந்து | |
| (i) தற்காலிக உரிமமானது 7 நாள்களைக் கொண்டதொரு கால அளவுக்கு மேற்படாதிருப்பின் | நுழைவு ஒன்றுக்கு இருக்கை அல்லது படுக்கை வசதி ஒன்றுக்கு 600.00 |
| (ii) தற்காலிக உரிமமானது 7 நாள்களுக்கு மேற்பட்டு ஆனால் 30 நாள்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கானதாக இருப்பின் | நுழைவு ஒன்றுக்கு இருக்கை அல்லது படுக்கை வசதி ஒன்றுக்கு 1500.00 |
| (iii) தற்காலிக உரிமமானது 30 நாள்களுக்கு மேற்பட்டு ஆனால் 90 நாள்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கானதாக இருப்பின் | நுழைவு ஒன்றுக்கு இருக்கை அல்லது படுக்கை வசதி ஒன்றுக்கு 3500.00 |

**நோக்க—காரண விளக்கவுரை.**

அரசானது, சுற்றுலாச் சீருந்துகள் போன்ற ஊர்திகள் தனி நபர் ஊர்திகளாகப் பயன்படுத்தப்படும்போது அவை ஆயுட்கால வரி விதிப்பு செய்யப்படுவதால், சுற்றுலாச் சீருந்துகளுக்கும் ஆயுட்கால வரி விதிப்பு செய்வதென முடிவு செய்துள்ளது.

**2.** பல்வேறான தரைப்பரப்புகளைக் கொண்டதாகவும் பல்வேறுபட்ட எண்ணிக்கையிலான இருக்கைகளை உடையதாகவும் பலவிதமாகச் செய்யப்பட்ட சுற்றுலா பெருமச் சீருந்துகள் இருப்பதால், இருக்கைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா பெருமச் சீருந்துகளுக்கு காலாண்டு வரி வசூலிப்பதில் இடர்பாடுகள் உணரப்பட்டுள்ளன. எனவே, 6 சதுர மீட்டருக்கு மேற்பட்ட தரைப்பரப்பு ஒன்றைக் கொண்ட அவ்வகையான புதிய ஊர்திகளுக்கு ஆயுட்கால வரி விதிப்புச் செய்வதெனவும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்கு தரைப்பரப்பின் அடிப்படையில் காலாண்டு வரி விதிப்புச் செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**3.** அகழ்வு இயந்திரம், சாலை செப்பனிடும் இயந்திரங்கள், பளு தூக்கிகள் போன்ற கட்டுமான தளவாட ஊர்திகளின் பயன்பாடானது குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது மற்றும் அத்தகைய ஊர்திகளுக்காக விதிக்கப்படும் தற்போதைய ஆண்டு வரியானது மிகவும் குறைவாக உள்ளது. எனவே அத்தகைய ஊர்திகளின் பேரில் ரூபாய் 10,000/– அளவிலான ஆண்டு வரி ஒன்றை விதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

**4.** ஊர்திகளின் உரிமையாளரின் வணிகம் அல்லது தொழிலுடன் தொடர்புடைய நபர்களைச் சுமந்து செல்லும் நோக்கத்திற்காக உள்ள தனி நபர் சேவை ஊர்திகளின் பயன்பாடானது தற்போது அதிகரித்துக் கொண்டிருக்கின்றன மற்றும் அத்தகைய ஊர்திகளின் மீது விதிக்கப்படும் வரியானது வழக்கமான நிலை ஊர்திகளுக்கு விதிக்கப்படும் வரியைவிடக் குறைவானதாக உள்ளது. எனவே, அத்தகைய ஊர்திகளை குளிர்சாதன வசதி கொண்ட ஊர்திகளாகவும் குளிர்சாதன வசதி கொண்டிராத ஊர்திகளாகவும் வகைப்படுத்தி, இருக்கையின் அடிப்படையில் காலாண்டு வரி விதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

**5.** தற்போது, இயங்கு நிலைப் பேருந்துகளை விடவும் நூற்றுக்கு 25 விழுக்காடு குறைவான அளவிலானதொரு வரி இருப்பு நிலை ஊர்திகளுக்கு விதிக்கப்படுகிறது. இருப்பு நிலை ஊர்திகள் அல்லது உபரிப் பேருந்துகளானவை மேலும் சிறப்பு நிகழ்வுகளில் சிறப்பு அனுமதிச் சீட்டின் பேரில் ஒப்பந்த ஊர்திகளாக பயன்படுத்தப்படுகின்றன. எனவே, அத்தகைய ஊர்திகளுக்காக அவை சிறப்பு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும்போது தனிப்பட்ட வரி ஒன்றை விதிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**6.** தற்போது, பிற மாநில ஊர்திகளிலிருந்து வசூலிக்கப்படும் வரியானது தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அதற்கு நேரிணையான ஊர்திகளின் பேரில் வசூலிக்கப்படும் வரி வீதத்திற்குச் சமமானதாக இருக்கிறது. இம்மாநில ஊர்திகளை ஒப்பு நோக்கும்போது பிற மாநில ஒப்பந்த ஊர்திகள் அதிக அளவில் சாலையைப் பயன்படுத்துவதாலும் அண்டை மாநிலங்கள் அவர்களின் மாநிலங்களுக்குள் பிற மாநில ஊர்திகள் நுழையும்போது அதிக வீதத்தில் வரி வசூலிப்பு செய்வதாலும், அத்தகைய ஊர்திகளுக்கு அதிக வீதத்திலான வரி ஒன்றை விதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

**7.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**V. செந்தில்பாலாஜி,**
*போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.